## அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)

(தேசிய தர மறுமதிப்பீட்டில் மூன்றாம் சுற்றில் B$^{++}$ தரம் பெற்றது)

(தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி
சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரசு உதவிபெறும் கல்லூரி)
(கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)
சின்னக்கலையம்புத்தூர்- 624 615
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு

Web : www.apacwomen.ac.in

E-mail : apacwprincipal@gmail.com

☎ (O) 04545 - 255128




# தகவல் தொகுப்பு

சுயநிதி பாடப்பிரிவு

**2024 - 2025**

அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, தேசிய தர மறுமதிப்பீட்டுக் குழுவின் மூன்றாம் சுற்றில் $B^{++}$ தரம் பெற்ற கல்லூரி.

தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் கல்லூரி ஆட்சிக்குழுவின் தலைவராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் செயல் அலுவலர்/தக்கார் அவர்கள் இக்கல்லூரியின் தாளாளராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் துணை ஆணையர் இக்கல்லூரியின் செயலராகவும் செயல்படுகின்றனர்.

பழனி முருகன் அருளால் இக்கல்லூரியில் கற்பிக்கும் கல்வி மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் அனைத்திலும் வெற்றி பெற்று மாணவியர் சிறப்படைகின்றனர்.

அதிகரித்து வரும் உயர்கல்வித் தேவையைக் கருத்தில் கொண்டு கிராமப்புற மாணவியர் குறைந்த செலவில் படித்து பட்டம் பெறுவற்கான வாய்ப்பை பெற வேண்டுமென்ற சீரிய நோக்கோடு கல்லூரி நிர்வாகம் 1998 - ஆம் ஆண்டு சுயநிதிப்பாடப்பிரிவு தொடங்கப்பட்டது.

அரசு உதவிபெறும் பாடப்பிரிவில் பயிலும் மாணவியருக்கும், சுயநிதிப்பாடப்பிரிவில் பயிலும் மாணவியருக்கும் பாடத்திட்டம், தேர்வுகள் மற்றும் வழங்கப்பெறும் பட்டம் ஆகியவற்றில் எவ்வித வேறுபாடுமில்லை.

## சுயநிதி பாடப்பிரிவுகள்

**இளநிலை பாட வகுப்புகள் (UG)**

1. பி.ஏ. தமிழ் இலக்கியம் (B.A., Tamil)
2. பி.ஏ. ஆங்கில இலக்கியம் (B.A., English)
3. பி.காம்(சி.ஏ) (B.Com(C.A).,)
4. பி.காம் (தமிழ்வழி) (B.Com) (Tamil Medium)
5. பி.எஸ்.சி.,(சி.எஸ்) (B.Sc.,(C.S))
6. பி.சி.ஏ., (B.C.A.,)
7. பி.ஏ.சைவ சித்தாந்தம் (B.A Saiva Sithantham)

**முதுநிலை பாட வகுப்புகள் (PG)**

1. எம்.ஏ., ஆங்கிலம் (M.A., English)
2. எம்.ஏ.,பொருளாதாரம் (M.A., Economics)
3. எம்.காம்., (M.Com.,)
4. எம்.எஸ்சி.,கணிதம் (M.Sc., Maths)
5. எம்.எஸ்சி.,இயற்பியல் (M.Sc., Physics)
6. எம்.எஸ்சி.,வேதியியல் (M.Sc., Chemistry)
7. எம்.எஸ்சி.,தாவரவியல் (M.Sc., Botany)
8. எம்.எஸ்சி., (சி.எஸ்) (M.Sc.,(C.S))

**எம்.ஃபில்., (M.Phil.,)**

1. தமிழ் (Tamil)
2. ஆங்கிலம் (English)
3. வரலாறு (History)
4. வணிகவியல் (Commerce)

**முனைவர் பட்டம் (Ph.D)**

1. தமிழ்
2. வரலாறு

- **Certificate Course in Saiva Illakiyam**

## விண்ணப்பதாரர்கள் செயல்பட வேண்டிய முறைகள்:

1. சேர்க்கைக்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்களே பதிவேற்றம் செய்ய வேண்டும்.
2. ஒரு விண்ணப்பத்தின் மூலம் அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.
3. கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், +2 மதிப்பெண் பட்டியல், சாதிச்சான்றிதழ் ஆகியவற்றை விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
4. மேல்நிலைப்பள்ளிச் சான்றிதழ்களில் குறிப்பிட்டுள்ளவாறு பிறந்த தேதியைக் குறிப்பிட வேண்டும்.
5. பட்டியல் இனத்தவர்கள் (SC), பட்டியல் இனத்தவர்கள் (அருந்ததியினர்) (SCA)/ பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC)/ சீர்மரபினர் (DNC)/ பிற்பட்ட வகுப்பினர் (BC) மற்றும் பிற்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M) சேர்ந்த விண்ணப்பதாரர்களின் சாதிச் சான்றிதழ்கள் உரிய அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
6. சரியான மதிப்பெண்களையே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டும். பரிசீலனைக்குப்பின் சரியான மதிப்பெண்கள் குறிப்பிடப்படவில்லை என்று தெரிய வந்தால்

   அ) விண்ணப்பதாரர் இக்கல்லூரியில் சேரும் தகுதியை இழப்பார்.

   ஆ) அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவர் படிக்க முடியாதபடி தடை செய்யப்படுவார்.

   இ) தவறான மதிப்பெண்களை குறிப்பிட்டதற்காக அவர்மீது சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. மாற்றுத் திறனாளிகள், தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் இராணுவப் படை வீரர்களின் குழந்தைகள், அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தமிழினத்தைச் சார்ந்தவர், விளையாட்டு (மாவட்ட/மண்டல அளவிலும் அல்லது அதற்கு மேலும்) சான்றிதழ்கள் மற்றும் தேசிய மாணவர் படை சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் உரிய விவரத்தை அதற்குரிய இடத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
8. சரியான விவரங்கள் பூர்த்தி செயயப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
9. கல்லூரிக் கல்வி இயக்குநரக வழிகாட்டுதலின்படி மாணவியர் சேர்க்கை நடைபெறும்.
10. பட்டியலின (SC/ST) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக்கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை. பதிவுக்கட்டணம் ரூ.2/- மட்டும் செலுத்தினால் போதுமானது.
11. விண்ணப்பதாரரின் 3 வயது வரம்பு சலுகை அரசு விதிகளுக்கு உட்பட்டு வழங்கப்படும்.
12. கல்லூரிச் சேர்க்கையில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதைக் கல்லூரி கல்வி இணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம்.
13. மாணவியர்களை கேலி (Ragging) செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் மாணவியர்கள் அரசு ஆணைப்படி தண்டிக்கப்படுவார்கள்.
14. மாணவியர்கள் சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள்

i. கடவுச்சீட்டு அளவிலான மூன்று புகைப்படங்கள்.

ii. பட்டியல் இனத்தவர் (SC), பட்டியல் இனத்தவர் அருந்ததியர்(SCA), பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (MBC)/ சீர் மரபினர் (DNC), பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (BC), பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M) ஆகியோர் அசல் சாதிச் சான்றிதழ் (சரிபார்க்க மட்டும்). மேற்கண்ட சான்றிதழ்களின் மூன்று ஒளிப்படி நகல்கள் (ஜெராக்ஸ் காப்பி) சமர்ப்பிக்க வேண்டும்.

iii. கடைசியாக படித்த கல்வி நிறவனம் வழங்கிய அசல் மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தைச் சான்றிதழை கட்டாயம் ஒப்படைக்க வேண்டும். அசல் மாற்றுச் சான்றிதழ் திருப்பித் தரப்படமாட்டாது. எனவே, தேவையான ஒளிப்படி (ஜெராக்ஸ்) நகல்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

15. சேர்க்கை முடிந்த பின் அன்றே கல்விக் கட்டணத்தையும் பிறக் கட்டணங்களையும் கல்லூரி அலுவலகத்தில் செலுத்த வேண்டும். அவ்வாறு சரியான நேரத்தில் கட்டணம் செலுத்த தவறும் விண்ணப்பதாரர்களின் சேர்க்கை ரத்து செய்யப்படும்.

16. **சுயநிதிப்பிரிவில் மாணவியர் செலுத்திய கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.**

17. மாணவியர் சேர்க்கை பற்றிய விபரங்களை www.apacwomen.ac.in என்ற கல்லூரி இணையதளத்தில் பார்த்துக் கொள்ளவும்.

18. மாணவியர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை கல்லூரி இணையதளம் மூலம் பூர்த்தி செய்து, பட்டியலின(SC/ST) விண்ணப்பதாரர்கள் பதிவுக்கட்டணம் ரூ.2/-(ரூபாய் இரண்டு மட்டும்), ஏனைய விண்ணப்பதாரர்கள் இளநிலை விண்ணப்ப படிவக் கட்டணமாக ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) மற்றும் முதுநிலை விண்ணப்ப படிவக் கட்டணமாக ரூ.60/- (ரூபாய் அறுபது மட்டும்) இணையதளம் மூலம் செலுத்த வேண்டும்.

**இளநிலை மாணவியர் சேர்க்கையின் போது செலுத்த வேண்டிய கட்டண விபரம் :**

| | **B.A ., (Tamil)<br>B.A ., (Saiva Sithantham)<br>B.A., (English)<br>B.Com., (Tamil Medium)** | **B.C.A.,<br>B.Sc., (CS)** | **B.Com., (CA)** |
|---|---|---|---|
| சேர்க்கை கட்டணம் | 200 | 200 | 200 |
| கல்விக்கட்டணம் | 9153 | 9453 | 10453 |
| சிறப்புக் கட்டணம் | 480 | 480 | 480 |
| ஆய்வகக் கட்டணம் | 0 | 3250 | 3250 |
| பல்கலைக்கழக நுழைவுக் கட்டணம் | 195 | 195 | 195 |
| ஆங்கிலப் பேச்சுப்பயிற்சிக் கட்டணம் | 0 | 450 | 450 |
| மதிப்பெண் பட்டியல் சரிபார்ப்பு கட்டணம் | 50 | 50 | 50 |
| காப்பீட்டுக் கட்டணம் | 37 | 37 | 37 |
| நாட்டு நலப்பணித்திட்ட கட்டணம் | 10 | 10 | 10 |
| இதரக்கட்டணம் | 25 | 25 | 25 |
| அடையாள அட்டை (ID Card) | 30 | 30 | 30 |
| **மொத்தம்** | **10180** | **14180** | **15180** |

(மேற்கண்ட கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.)

## முதுநிலை மாணவியர் சேர்க்கையின் போது செலுத்த வேண்டிய கட்டண விபரம் :

| | M.A ., (English) | M.A ., (Economics) | M.Com | M.Sc., Maths | M.Sc Physics | M.Sc Chemistry | M.Sc., Botany | M.Sc (CS) |
|---|---|---|---|---|---|---|---|---|
| சேர்க்கை கட்டணம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| கல்விக்கட்டணம் | 8765 | 13215 | 9765 | 17215 | 22715 | 22715 | 16715 | 12685 |
| சிறப்புக் கட்டணம் | 430 | 480 | 430 | 480 | 480 | 480 | 480 | 380 |
| ஆய்வகக் கட்டணம் | - | - | | | 2500 | 2500 | 2500 | 4500 |
| பல்கலைக்கழக நுழைவுக் கட்டணம் | 195 | 195 | 195 | 195 | 195 | 195 | 195 | 195 |
| கருத்தரங்கம் | - | - | - | - | - | - | - | 1000 |
| கற்பித்தல் சாதனங்கள் | - | - | - | - | - | - | - | 900 |
| கள வருகை மற்றும் திட்டம் | - | - | - | - | - | - | - | 800 |
| அங்கீகார கட்டணம் | - | - | - | - | - | - | - | 200 |
| இணைதளம் | - | - | - | - | - | - | - | 500 |
| பட்டமளிப்பு கட்டணம் | - | - | - | - | - | - | - | 25 |
| கொடி நாள் | - | - | - | - | - | - | - | 5 |
| உள்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு கட்டணம் | - | - | - | - | - | - | - | 700 |
| கல்லூரி வளர்ச்சி கட்டணம் | 500 | - | 500 | - | - | - | - | - |
| காப்பீட்டுக் கட்டணம் | 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |
| நாட்டு நலப்பணித்திட்ட கட்டணம் | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| இதரக்கட்டணம் | 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |
| அடையாள அட்டை (ID Card) | 30 | 30 | 30 | 30 | 30 | 30 | 30 | 30 |
| **மொத்தம்** | **10080** | **14080** | **11080** | **18080** | **26080** | **26080** | **20080** | **22080** |

(மேற்கண்ட கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.)

**எம்.ஃபில் மாணவியர் சேர்க்கையின் போது செலுத்த வேண்டிய கட்டண விபரம் :**

| | **M.Phil (Tamil)** | **M.Phil (English)** | **M.Phil (History)** | **M.Phil (Commerce)** |
|---|---|---|---|---|
| கல்விக்கட்டணம் | 9353 | 9353 | 9353 | 9353 |
| சிறப்புக் கட்டணம் | 480 | 480 | 480 | 480 |
| பல்கலைக்கழக நுழைவுக் கட்டணம் | 195 | 195 | 195 | 195 |
| காப்பீட்டுக் கட்டணம் | 12 | 12 | 12 | 12 |
| நாட்டு நலப்பணித்திட்ட கட்டணம் | 10 | 10 | 10 | 10 |
| அடையாள அட்டை (ID Card) | 30 | 30 | 30 | 30 |
| **மொத்தம்** | **10080** | **10080** | **10080** | **10080** |

(மேற்கண்ட கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.)